இது
நம்தேசம்

01.10.2026 - 15.10.2026

வலி. வடக்கு காணி விடுவிடுப்பு : அனுர அரசின் எமாற்று வாக்குறுதி : கஜேந்திரகுமார் கண்டனம்!

மயிலத்தமடுவில் தமிழர்களின் மாடுகளை சுட்டுத்தள்ளி சிங்களவர்கள் அடாவடி!

வவுனியா சமணங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமிக்க பௌத்த பிக்குகள் முயற்சி!

ஞானசார தேரரை விடுதலை செய்யக்கோரி ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்ட பிக்குகள்

- இரவிரவாக தொடர்ந்து போராட்டம் : அடிபணிவாரா அனுர? -

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த போது வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை உயர்நீதிமன்றம் இரத்துச் செய்துள்ள நிலையில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் பொது பலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு கோரியும், பௌத்த தேரர்களின் மத உரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறு வலியுறுத்தியும் பௌத்த தேரர்களால் முன்னெடுக்கப்பட்ட நடைபேரணி, கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலக வளாகத்தை நேற்று மாலை வந்தடைந்தது.

இந்த நடைபேரணி காரணமாக காலிமுகத்திடல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டதுடன், பாதுகாப்புக்காக அதிகளவிலான பொலிஸாரும் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் தீவிர பாதுகாப்புப் பணியில் தேரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அப்போது, தேரர்களின் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்கு கால அவகாசம் தேவைப்படும் என ஜனாதிபதி செயலாளர் தெரிவித்தார். இருப்பினும், ஒரு முடிவை எடுப்பதற்கான குறிப்பிட்ட காலக்கெடு குறித்து உடன்பாடு எட்டப்படாமல் இந்த பேச்சு நிறைவடைந்ததால், பிக்குகள் தமது போராட்டத்தை கொட்டும் மழைக்கு மத்தியில் தொடர்ந்து முன்னெடுத்தனர். இதனிடையே, காலி வீதியில் போராட்டக்காரர்கள் தற்காலிகக் கூடாரமொன்றை அமைத்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்துக்கு வெளியே பதற்றம் நிலவியது. அக்கூடாரத்தை உடனடியாக அகற்றுமாறு பொலிஸார் அறிவுறுத்திய போதிலும் பிக்குகள் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர்.

இதையடுத்து, பொலிஸார் பலவந்தமாகக் கூடாரத்தை அகற்றியமையுடன், அங்கிருந்த பிக்கு ஒருவரையும் கைது செய்தனர். இதனால் கோபமடைந்த பிக்குகள் மற்றும் ஆர்ப்பாட்டக் காரர்கள் பொலிஸாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையால் அங்கு பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்தப் போராட்டம் காரணமாகக் கொழும்பு – காலி முகத்திடல் வீதியில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுத் தடைப்பட்டது. ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகக் கலகத் தடுப்புப் பொலிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பணியில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினாலோ அல்லது சட்டத்தை மீறினாலோ கைது செய்யப்படுவீர்கள் எனப் போராட்டத்தில் ஈடுபடும் பிக்குகளுக்குப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பிக்குகளும், அவர்களின் ஆதரவாளர்களும் பொலிஸாரின் வேண்டுகோளை ஏற்று காலி வீதியின் எதிர்ப்பக்க நடைபாதைக்குத் தமது போராட்டத்தை மாற்றினர்.

இதனையடுத்து, காலி வீதியின் போக்குவரத்து மீண்டும் முழுமையாகச் சுமுக நிலைக்குத் திரும்பியது. குறைந்த எண்ணிக்கையிலான போராட்டக் காரர்களுடன் ஆர்ப்பாட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரசன்ன ரணவீர, சஞ்சீவ எதிரிமான்ன, இந்திக அனுருத்த மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.



வலி. வடக்கு காணி விடுவிப்பு அனுர அரசின் ஏமாற்று வாக்குறுதிகள்

- பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் சீற்றம் -

வலி வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகளை விடுவிக்கிறோம் என கூறி தமிழ் மக்களை அநுர அரசாங்கம் ஏமாற்றி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

வலி வடக்கு விடுவிக்கப்படாத தனியார் காணிகள் தொடர்பில் அமைச்சர் சந்திரசேகரன் அண்மையில் தெரிவித்த கருத்து தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போது ஜனாதிபதியாக இருக்கின்ற அநுரகுமார ஜனாதிபதி தேர்தல் பிரச்சார நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் வந்தபோது பாதுகாப்பு தரப்பினரிடம் இருக்கின்ற மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்படும் என உறுதிமொழி வழங்கினார்.

உறுதிமொழி வழங்கி இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் மக்களின் காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்படாத நிலையில் ஏமாற்றப்பட்ட மக்கள் தையிட்டி பலாலி,வசாவிளான்,மயிலிட்டி ,என தொடர்ச்சியாக நான்கு இடங்களில் ஒவ்வொரு வாரமும் போராட்டங்களை நடாத்தி வருகின்றனர்.

அநுர அரசாங்கத்தின் அமைச்சரான இராமலிங்கம் சந்திரசேகரன் அண்மையில் தெரிவித்த கருத்தை ஊடகங்களில் பார்த்தேன்.

ஜனாதிபதி தலைமையில் வலி வடக்கு காணி விடுவிப்பு தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்ட நிலையில் கடந்த செப்டம்பர் மாத இறுதிக்குள் சாதகமான முடிவு கிடைக்கும் என கருத்து தெரிவித்திருந்தார் காணி விடுவிப்பு இடம்பெறவில்லை.

நான் அறிந்த வகையில் வலி வடக்கில் இன்னும் விடுவிக்கப்படாமல் சுமார் 2000 ஏக்கருக்கு மேற்பட்ட தனியார் காணிகள் உள்ள நிலையில் அவற்றில் சில ஏக்கர்களை மட்டும் விடுவித்து மக்களை ஏமாற்றும் முயற்சிகள் இடம் பெற்று வருவதாக அறிகிறேன்.

அதேபோன்று பலாலி தனியார் காணிகளில் சட்டவிரோதமாக கட்டப்பட்டு வருகின்ற பலாலி இராணுவ வைத்தியசாலையின் கட்டுமானங்களை நிறுத்துமாறு யாழ் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம் எடுத்திருந்தோம்.

ஆனால் தீர்மானத்தை மீறி அநுர அரசாங்கம் தனியார் காணிக்குள் இராணுவ வைத்தியசாலையின் கட்டுமானங்களை மிக துரிதமாக மேற்கொண்டு வருகிறது. தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்காக தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த அநுர தலையிலான அரசாங்கம் வலி வடக்கு மக்களை தொடர்ந்து ஏமாற்றி வருகிறது.

30 வருடங்களாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து 17 வருடங்களை கடக்கின்ற நிலையில் வலி வடக்கு மக்கள் தமது பூர்வீக நிலங்களுக்குள் செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலையில் வாடகை வீடுகளில் வாழ்ந்து வருகிறார்கள்.

அந்த மக்களுடைய வளமான விவசாயக் காணிகளில் இராணுவம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு பாரிய இலாபங்களை ஈட்டி வருகிறது.

இராணுவத்தினரால் தமிழ் மக்களுடைய காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் பெறப்பப்படும் வருமானம் திறைசேரிக்கு செல்கிறதா? அல்லது வலி வடக்கில் இராணுவ விரிவாக்களுக்கு பயன்படுத்தப்படுகிறதா என கேட்க விரும்புகிறேன்.

ஆகவே வலி வடக்கு தனியார் காணிகளை விரைவாக விடுவிப்பதோடு மக்களை ஏமாற்றுவதற்காக சில ஏக்கர்களை மட்டும் விடுவித்து ஏமாற்ற வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஞானசார தேரரிற்கு பிரான்ஸில் உள்ள மனைவி மற்றும் மகள்

- ஜாஎல முன்னாள் நகரபிதா அஞ்சு பெரேரா தகவல் -

இலங்கையில் தற்போது சர்ச்சைக்குரிய நபராகவுள்ள ஞானசார தேரருக்கு பிரான்ஸில் மனைவியும் மகளும் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பொதுபலாசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் வணக்கத்திற்குரிய கலகொடஅத்தே ஞானசார தேரர் குறித்து மிகச் சர்ச்சைக்கரிய பல தகவல்களை ஜா–எல முன்னாள் நகரபிதா அஞ்சு பெரேரா வெளிப்படுத்தியுள்ளார்.

ஜா–எல முன்னாள் நகரபிதா , நேர்காணலில் ஒன்றிலேயே ஞானசார தேரர் குறித்த தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளார். ஞானசார தேரருடன் நீண்டகாலமாக நெருங்கிப் பழகியதாகக் கூறும் அஞ்சு பெரேரா, தேரருக்கு பிரான்ஸில் மனைவியும் ஒரு மகளும் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

“மனோஜா” எனப்படும் அந்தப் பெண் இலங்கை வந்தடைந்தது முதல், கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்று அவரை அழைத்து வந்து தெஹிவளையில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் தங்குவதற்குக் தங்குமிட வசதி செய்து கொடுத்தது தாம் தான் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஞானசார தேரர் சுற்றுப்பயணங்கள் மேற்கொண்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள விடுதிகளுக்குச் செல்லும் போதுகூட, குடும்பத்தினருடன் ஒரே அறையில் தங்கியிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

ஞானசார தேரர் துறவிக் காவி உடை அணிந்திருந்த போதிலும், ஒரு சாதாரண மனிதனை விடவும் கேவலமான முறையில் நடந்துகொண்டதாகக் குற்றம்சாட்டிய முன்னாள் நகரபிதா, அவர் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்ததுடன் மதுபானம் அருந்தி, சிகரெட் புகைத்து, சாதாரண ஆடைகளை அணிந்து சுற்றித் திரிந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணியாக இருந்த தனது மனைவியிடம் கூட தேரர் தவறான முறையில் நடந்துகொள்ள முயன்றதாகவும், அந்தச் சம்பவத்திற்குப் பிறகே தாம் தேரரிடமிருந்து விலகியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர, பொதுபலாசேனா அமைப்பின் செயல்பாடுகள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் திட்டங்கள் மற்றும் தேவைகளுக்கு ஏற்பவே இயக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அளுத்கம மோதல் உட்பட மதக் கலவரங்களை உருவாக்குவதற்காக ராஜபக்ஷக்களிடம் இருந்து தொலைபேசி அழைப்புகளும் வழிகாட்டல்களும் கிடைத்ததாக அவர் இதன்போது வெளிப்படுத்தியுள்ளார்.

பௌத்த சாசனத்தையும் பௌத்த துறவிகளின் கௌரவத்தையும் சீரழித்து, தேசிய இயக்கம் என்ற போர்வையில் குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்ட இத்தகைய நபர்கள் உண்மையான துறவிகள் அல்லர் என்றும், இவருக்கு மிகவும் பொருத்தமானது சிறைச்சாடை உடடே என்றும் , தாம் வெளியிட்ட இந்த அறிக்கைகள் அனைத்திற்கும் முழுப் பொறுப்பையும் ஏற்பதாகவும் ஜா–எல முன்னாள் நகரபிதா அஞ்சு பெரேரா கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது

வவுனியா சமணங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயத்திலும் பௌத்த வழிபாட்டுக்கு திட்டம்!

– அனுர அரசிலும் தொடரும் தமிழர் மீதான இனவழிப்பு –

வவுனியா சமளங்குளம் கல்லுமலை பிள்ளையார் கோவில் இருக்கும் பகுதியில் கல்கமுவ சந்தபோதி தேரர் தலைமையில் பௌத்த வழிபாடுகளை நடத்துவதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வெடுக்குநாறி மலைய மையப்படுத்தி 260 ஏக்கர் பிரதேசம் தொல் பொருளியல் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வவுனியா மாவட்டத்தின் சமளங்குளம் கல்லுமலை பிள்ளையார் கோவில் அமைந்துள்ள பகுதியில் கல்கமுவ சந்தபோதி தேரர் தலைமையில் பௌத்த வழிபாடுகளை எதிர்வரும் காலத்தில் முன்னெடுப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்த பகுதியானது அநுராதபுர காலத்தைச் சேர்ந்த பண்டைய பௌத்த வளாகத்தின் இடிபாடுகளைக் கொண்ட வரலாற்று நிலமாகும் என்றும், இது வவுனியா நகரத்திலிருந்து 5 கிலோ மீற்றர் தொலையில் உள்ள சமளங்குளம் ஏரிக்கு அருகில் அமைந்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1970களில் நடத்தப்பட்ட தொல்பொருள் ஆய்வின் படி, இந்த இடம் மத்திய அநுராதபுர காலத்தைச் சேர்ந்தது என முடிவு செய்யப்பட்டுள்ளதோடு இயற்கையான கருங்கல் குளத்தின் மீது ஒரு சிலை மற்றும் செங்கற்களால் கட்டப்பட்ட பண்டைய தங்குமிடம் ஆகியவை உள்ளிட்ட பல சான்றுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் இந்தப் பகுதியின் கீழ் அமைப்பு எட்டு பக்கங்கள் மற்றும் ஆறு பக்கங்கள், வடிவங்களில் ஒரு சதுர மேடையில் கட்டப்பட்டிருப்பது தனித்துவமான அம்சமாகும் என்றும் தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வாராய்ச்சியின் போது, வெண்கலத்தால் செய்யப்பட்ட அவலோகிதேஸ்வர போதிசத்துவர் சிலையும், அந்த சிலைக்குள் புத்த சிலையின் பகுதியும் கண்டெடுக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பண்டைய தொல்பொருள் நிலத்தில் தற்போது 'சமளங்குளம் பிள்ளையார் கோவில்' என்ற பெயரில் நவீன இந்து கோயில் கட்டப்பட்டு வருவதால் பெரும்பாலான பௌத்த இடிபாடுகள் நீரில் அழிக்கப்படும் அபாயத்தில் இருப்பதால் அப்பகுதியில் பௌத்த அடையாளத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, வெடுக்குநாறி மலையை மையப் படுத்தி 260 ஏக்கர் பகுதி தொல்பொருளியல் திணைக்களத்துக்கு சொந்தமாக்குவதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதோடு அதன் முதற்கட்டத்தில் 51 ஏக்கர்கள் நில அளவை செய்யப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கல்கமுவ சாந்தபோதி தலைமையிலான குழுவினர் தமிழர் பகுதியிலுள்ள இந்துக்களின் தொன்மையான ஆலயங்களை குறிவைத்து அவற்றை பௌத்த மயப்படுத்தும் செயற்பாடுகளை சமூக ஊடகங்கள் மூலம் தொடர்ச்சியாக செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கத்தின் மறைவுக்கு கஜேந்திரகுமார் இரங்கல்

சிரேஷ்ட அரசியல் ஆய்வாளரும் சிந்தனை யாளருமான ஜோதிலிங்கத்தின் மறைவு தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அன்னாரின் மறைவு தொடர்பாக வெளியிட்டுள்ள விசேட இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜோதிலிங்கம் வெறும் ஆசிரியராகவோ வழக்கறிஞராகவோ மட்டுமன்றி, தமிழ் மக்களின் எதிர்காலம், தமிழ் தேசியம் மற்றும் தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமை குறித்து ஆழமாகச் சிந்தித்த சிறந்த சிந்தனையாளராகத் திகழ்ந்தார் எனக் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் எதிர்கொண்ட அரசியல் ஆபத்துகளை முன்கூட்டியே கணித்து, பொதுமக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அவர் தொடர்ந்து செயற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், புவிசார் அரசியல், உலக அரசியல் போக்குகள் மற்றும் பேரினவாதம் போன்ற சிக்கலான விடயங்களைச் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் தனது எழுத்துகள் மூலம் தெளிவுபடுத்தும் ஆற்றல் அவருக்கு இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜோதிலிங்கத்தின் மறைவால் தமிழ் மக்கள் எதிர்காலத்தில் பெரும் இழப்பை உணர்வார்கள் எனத் தெரிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், துயரத்தில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட முறையிலும், தமிழ் தேசிய பேரவை, தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பாகவும் தனது இரங்கலையும் மரியாதையையும் தெரிவிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அர்ச்சுனாவால் கிளம்பும் சர்ச்சை கூட்டத்தில் கஜேந்திரன் கண்டனம்

யாழ்ப்பாணம் பழைய பூங்கா விவகாரம் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், யாழ் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கருத்துக்களை முன்வைத்தபோது கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ராமநாதன், மற்றும் செல்வராசா கஜேந்திரன் இடையே இவ்வாறு வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அர்ச்சுனாவை நோக்கி 'உன்னால் தான் இவ்வளவும் அமைதியாக இரு' என கஜேந்திரன் கடுமையாக சாடியிருந்தார்.

அனுராதபுரத்தில் இன்னும் பல கூட்டங்கள் நடக்கும் என்றும் அங்கு சென்று உங்களது கேள்விகளை கேட்டுக்கொள்ளுங்கள் எனவும் கூறினார். மேலும் யாழ் மாவட்டத்துக்கு ஒடுக்கப்பட்ட 55 மில்லியன் ரூபாய் நாசம் செய்யப்பட்டுள்ளது எனவும் கஜேந்திரன் குற்றச்சாட்டு ஒன்றையும் முன்வைத்தார்.

கடந்த மாதம் அனுராதபுரத்தில் நடைபெற்ற மொட்டுக் கட்சியின் கூட்டத்தில் கலந்துகொண்டு அர்ச்சுனா மகிந்தவிற்கு ஆதரவாக கருத்துக்களை தெரிவித்திருந்ததுடன், அதன் தொடர்ச்சியாகவும் மகிந்த மற்றும் நாமலிற்கு ஆதரவான கருத்துக்களை தெரிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

– சிறுவர் துஸ்பிரயோகங்களில் ஈடுபட்ட பிக்குகள் –

ஆலயத்தில் தங்கியிருந்த 07 வயது பௌத்த பிக்கு துஸ்பிரயோகம்

– கொடும் செயலில் ஈடுபட்ட மூத்த பிக்குவிற்கு சிறை –

ஏழு வயது சிறு துறவி ஒருவரை கடுமையாக பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றத்திற்காக, மூத்த பௌத்த துறவி ஒருவருக்கு விதிக்கப்பட்ட பத்து ஆண்டு கால கடுமையான சிறைத்தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

குறித்த தண்டனைக்கு எதிராக அந்தத் துறவி தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்ததன் மூலம் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்தத் துயரச் சம்பவங்கள் 2014 நவம்பர் 23 முதல் 2015 ஜனவரி 23 வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. அக்காலகட்டத்தில், பாதிக்கப்பட்ட சிறு துறவிக்கு ஏழு வயது மட்டுமே ஆகியிருந்தது.

குற்றம் சாட்டப்பட்ட மூத்த துறவி வசித்து வந்த அதே பௌத்த ஆலயத்தில் தங்கியிருந்தபோதே, இந்தச் சிறுவன் இக்குற்றச் செயலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளான்.

இதற்கு முன்னதாக, பொலன்னறுவை மேல் நீதிமன்றம், தண்டனைச் சட்டக்கோவையின் 365B(2)(b) பிரிவின் கீழ், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான இரண்டு குற்றச்சாட்டுகளில் இந்தத் துறவி குற்றவாளி என்று தீர்ப்பளித்திருந்தது.

வழக்கின் முடிவில், ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா பத்து ஆண்டுகள் கடுமையான சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், இந்தத் தண்டனைகளை ஒரே காலத்தில் (ஒன்றோடொன்று இணைந்து) அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

மேலும், ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 50,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகையைச் செலுத்தத் தவறினால், மேலதிகமாக ஆறு மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு ஒரு லட்சம் ரூபாயை இழப்பீடாக வழங்குமாறும் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, தனது தண்டனை மற்றும் தீர்ப்பை எதிர்த்து அந்தத் துறவி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். நீதிபதிகள் அமல் ரணராஜா மற்றும் கலாநிதி சுமுது பிரேமச்சந்திரா ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு இந்த மனுவை விசாரித்தது.

பாதிக்கப்பட்ட சிறுவன், நடந்த சம்பவங்கள் குறித்து மிகவும் விரிவான மற்றும் முரண்பாடற்ற சாட்சியங்களை வழங்கியுள்ளதை நீதிமன்றம் குறிப்பாகச் சுட்டிக்காட்டியது.

குறுக்கு விசாரணையின் போது கண்டறியப்பட்ட சிறிய முரண்பாடுகள், பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான முக்கிய குற்றச்சாட்டுகளுடன் எந்த வகையிலும் தொடர்புடையவை அல்ல என்றும், எனவே அவற்றை அடிப்படையாகக் கொண்டு சிறுவனின் சாட்சியத்தின் நம்பகத்தன்மையை நிராகரிக்க முடியாது என்றும் நீதிபதிகள் அமர்வு குறிப்பிட்டது.

இதன்படி, பாதிக்கப்பட்ட சிறுவன் வழங்கிய சாட்சியம் நம்பகமானதாகவும் உண்மையானதாகவும் இருந்ததால், அந்த ஆதாரங்களின் அடிப்படையில் தீர்ப்பை வழங்க வழக்கைக் விசாரித்த நீதிபதிக்கு முழு அதிகாரம் உண்டு என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

இந்த மேல்முறையீட்டு விசாரணையின் போது, சட்டமா அதிபருக்குப் பதிலாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஷனில் குலரத்ன நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

விகாரைக்குள் வைத்து பிரான்ஸ் பெண் சுற்றுலாப் பயணி மீது துஸ்பிரயோகம்

– தங்காலையில் பௌத்த பிக்கு கைது –

அம்பாந்தோட்டை தங்காலை கதுருபொகுன பகுதியில் உள்ள ஒரு பௌத்த விகாரையைச் சேர்ந்த பிக்கு ஒருவர், இலங்கைக்குச் சுற்றுலா வந்திருந்த பிரெஞ்சு நாட்டுப் பெண் ஒருவரை ஆலயத்தில் வைத்து பாலியல் ரீதியாகத் துன்புறுத்த முயன்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தங்காலை காவல் நிலையத்தில் இது குறித்த முறைப்பாடு ஒன்று பெறப்பட்டதை பொலிஸ் ஊடகப் பிரிவு பிபிசி சிங்கள சேவையிடம் உறுதிப்படுத்தியுள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவின் தகவல்படி, ஒக்டோபர் 2, 2026 அன்று அந்தப் பெண் விகாரையைச் சுற்றிப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தில் பிக்கு ஒருவர் தன்னை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து, அவர் தங்கல்லே சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த பிக்கு அதே நாளில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில், அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


r/srilanka • 10d ago
u/KindSuccess5564

A monk attempt to R*pe me

Serious replies only

Hello,

I'm in Sri Lanka,
I went this morning to a temple for the morning chant,
A monk saw me and saw I was lost because o couldn't find the room, then he guide me to a place saying this is the room, the room was really dodgy , I didn't felt safe and wanted to leave.

When I try to leave he just grab me by my wirst.. then i arrived to free myself from him and run, he caught me again and grab me by my shoulder and try to force me on the wall .. then I scream as Loud as I could and try to free me from him
By pushing and punching then I free myself and run as fast as I could until i could escape.

அவுஸ்திரேலியாவில் பல சிறுமிகள் மீது அத்துமீறிய இலங்கைப் பௌத்த பிக்கு

– 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை –

மெல்போர்னில் உள்ள ஒரு பௌத்த மதத்தலத்தில் ஆறு சிறுமிகளைப் பாலியல் அத்துமீறலுக்கு உற்படுத்திய குற்றத்திற்காக, இலங்கையில் பிறந்த பௌத்த பிக்கு ஒருவருக்கு அவுஸ்திரேலியாவில் 13 ஆண்டுகள் மற்றும் இரண்டு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மெல்போர்னின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள 'தம்ம சரண' பௌத்த மதத்தலத்தில் தலைமை பிக்குவாகப் பணியாற்றிய 71 வயதான நௌதுன்னே விஜித்த (Naotunne Vijitha) என்பவருக்கு, விக்டோரியா கவுண்டி நீதிமன்றம் 08.10.2026 அன்று இந்தத் தண்டனையை விதித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பௌத்த சமூகத்தில் தனக்கு இருந்த மதிப்பிற்குரிய பதவியைத் தவறாகப் பயன்படுத்தி இக்குற்றங்களைச் செய்ததன் மூலம், அவர் நம்பிக்கையை மோசமாகத் துரோகம் செய்துள்ளதாக அந்நாட்டு நீதிபதி பர்தீப் திவானா குறிப்பிட்டார்.

சிறுவர் மீது பாலியல் ரீதியாக ஊடுருவும் செயலில் ஈடுபட்டது தொடர்பான ஒன்பது குற்றச்சாட்டுகள் மற்றும் சிறுவருடன் கண்ணியமற்ற செயலில் ஈடுபட்டது தொடர்பான எட்டு குற்றச்சாட்டுகள் உட்பட மொத்தம் 17 குற்றச்சாட்டுகளில் பௌத்த பிக்கு குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மெல்போர்னின் ஸ்பிரிங்வேல் மற்றும் கீஸ்பரோ பகுதிகளில் இயங்கி வந்த அந்த பௌத்த மதத்தலத்தில் 1994 மற்றும் 2002 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இக்குற்றங்கள் நிகழ்ந்தன.

சிறுமிகளைத் தனது இருப்பிடத்திற்குத் தொடர்ந்து வரவழைத்து பாலியல் ரீதியாகத் அத்துமீறலுக்கு உள்ளாக்கியதாகவும், சில சமயங்களில் அவர்களின் பெற்றோர் அருகிலுள்ள அறைகளில் இருந்தபோதே இச்செயல்களைச் செய்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமிகள் தங்கள் குடும்பத்தினருடன் மத நடவடிக்கைகளில் பங்கேற்க அந்தக் கோவிலுக்குச் சென்றிருந்தனர்.

தண்டனையை அறிவிக்கும்போது, பௌத்த மதத்தலத்தில் தங்கள் குழந்தைகள் பாதுகாப்பாக இருப்பதாக நம்பிய பெற்றோர்கள் அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையை அந்தப் பிக்கு தவறாகப் பயன்படுத்திக்கொண்டதாக நீதிபதி திவானா கூறினார்.

இக்குற்றங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீடித்த உளவியல் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், அவர்களில் சிலர் பௌத்த மத நடைமுறைகள் தொடர்பான மன உளைச்சலைத் தொடர்ந்து அனுபவித்து வருவதாகவும் நீதிபதி தெரிவித்தார்.

துன்புறுத்தல் சம்பவங்கள் நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகே பாதிக்கப்பட்ட பெண்கள் காவல்துறையிடம் புகார் அளித்ததாகவும், அதன் விளைவாக 2023-ல் தேரர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் கூறப்பட்டது.

விசாரணையின் போது அவர் குற்றச்சாட்டுகளை மறுத்தார். அத்தகைய சம்பவங்கள் எதுவும் நடக்கவில்லை என்று அவரது வழக்கறிஞர்கள் வாதிட்டனர். மேலும், புகார் அளித்தவர்களில் சிலரை அவருக்கு நினைவில் இல்லை என்றும் அவர்கள் கூறினர்.

பிணை பெறுவதற்குத் தகுதி பெறுவதற்கு முன்பு, குறித்த தேரர் குறைந்தது ஒன்பது ஆண்டுகள் மற்றும் நான்கு மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும்

தீர்ப்புக்குப் பிறகு நீதிமன்றத்தில் இருந்த தனது ஆதரவாளர்களைப் பார்த்து அந்தப் பிக்கு புன்னகைத்து கையை அசைத்தபோது, பாதிக்கப்பட்டவர்களில் பலர் கோபத்தை வெளிப்படுத்தியதாக செய்தி வெளியிட்டுள்ளது.

தேரர் இலங்கையில் பிறந்தவர் என்றும், தனது 15 வயதில் பௌத்த துறவறத்தில் சேர்ந்தார் என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அவர் சுவீடனுக்கு குடிபெயர்ந்து, அங்கு குடியுரிமை பெற்றார். அதன்பிறகு, 1994-ல் தம்ம சரண கோயிலின் தலைமைத் துறவியாவதற்காக அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்தார்.

தனது சிறைத் தண்டனையை முடித்த பிறகு தேரர் நாடு கடத்தப்படலாம். அவர் சுவீடனுக்குத் திரும்பத் தயாராக இருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழில் புதிய மதுபானசாலைகள் போராட்டத்தில் குதித்த மக்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக அனுமதியளிக்கப்பட்ட நான்கு மதுபானசாலைகளின் அனுமதிகளை இரத்துச் செய்யுமாறு கோரி, வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினரால் 15.10.2026 அன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு முன்பாக நடைபெற்ற இப்போராட்டத்தில், புதிதாக அனுமதிக்கப்பட்ட மதுபானசாலைகளுக்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இப்போராட்டத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், மதுவொழிப்புக்கான அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக மதுபானசாலைகளைத் திறப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிகளை இரத்துச் செய்ய வேண்டும் என வலியுறுத்தியே இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நீர்வேலியில் புதிய மதுபானசாலைக்கு
அனுமதி வழங்கியதற்கு எதிராக
மாபெரும் கண்டனப் போராட்டம்!
மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, யாழில்
புதிதாக வழங்கப்பட்ட 4 மதுபானசாலை
உரிமங்களையும் ரத்துச் செய்!

இளைஞர்களின் எதிர்காலத்தை சீரழிக்கும் மதுக்கடை வேண்டாம்
மதுவை கொடுத்து வாழ்க்கையயும் சீரழிக்காதே

தையிட்டி விகாரைப் பகுதியில் தொடரும் சட்டவிரோத கட்டுமானப் பணிகள்

- தவிசாளர் உள்ளிட்டோரை தடுத்த பொலிஸார் -

தையிட்டி சட்டவிரோத விகாரைக்குள் சட்டவிரோத கட்டடங்கள் தொடர்ச்சியாக கட்டப்பட்டு வருவதாக வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினரும், தையிட்டி விகாரைக்காக அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்களில் ஒருவரான சாருஜன் தெரிவித்துள்ளார்

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள பகுதியில் புதிய கட்டுமான பணிகள் முன்னெடுக்கப்படுவதாக எனக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு அது தொடர்பில் தெரியப்படுத்தினேன். அதனை அடுத்து அவ்விடத்திற்கு வருகை தந்த எமது சக உறுப்பினர்கள் மூவருமாக நாம் 04.10.2026 அன்று விகாரை அமைந்துள்ள பகுதிக்கு சென்றோம்.

அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினர் மற்றும்பொலிஸார்எம்மைவிகாரைஅமைந்துள்ள பகுதிக்குள் செல்ல அனுமதிக்கவில்லை இந்த அரசாங்கம் மக்களின் காணி மக்களுக்கு என கூறி வருகின்றனர். புதிய அரசாங்கம் வந்து இரண்டு வருடங்கள் கடந்தும் காணிகள் விடுவிக்கப்படவில்லை. விகாரை அமைந்துள்ள காணிகளை விடுவிப்போம் என்றவர்கள் விடுவிக்கவில்லை. ஆனால் தற்போதும் விகாரை அமைந்துள்ள காணிகளுக்குள் தொடர்ச்சியாக சட்டவிரோத கட்டுமானங்கள் இடம்பெற்று வருகின்றன. காணிகளை விடுவிப்போம் என கூறி வரும் அரசாங்கம் சட்டவிரோத கட்டுமான பணிகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என கோருகிறோம் என தெரிவித்தார்.

இதேவேளை விகாரை அமைந்துள்ள பகுதியில் மேலும் சட்டவிரோத கட்டடங்கள் கட்டப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் விகாரை பகுதிக்கு சென்ற வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

வலி.வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு 15.10.2026 அன்று நடைபெற்றது. அதன் போது, தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதியில் மேலும் சட்டவிரோத கட்டடங்கள் கட்டப்படுவது தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து கூட்டம் நிறைவுற்ற பின்னர் , தவிசாளர் தலைமையில் சபை உறுப்பினர்கள் விகாரை அமைந்துள்ள பகுதிக்கு விஜயம் செய்தனர். அதன் போது விகாரையின் வாயிலில் காவல் கடமையில் இருந்த பொலிஸார் பிரதேச சபை உறுப்பினர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை

அதனால் , விகாரையில் வெளியே நின்று பிரதேச சபையின் அனுமதிகள் இன்றி சட்டவிரோதமான முறையில் தனியார் காணிகளில் முன்னெடுக்கப்படும் புதிய கட்டுமான பணிகளை தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் நேரில் பார்வையிட்டு சென்றனர்.

யாழில் பால் குடித்துவிட்டு உறங்கிய குழந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், அனலைதீவில் புட்டிப்பால் குடித்துவிட்டு உறங்கிய ஒரு வயது குழந்தை வாயிலும் மூக்கிலும் நுரை வந்த நிலையில் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அனலைதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு வயது குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

01.10.2026 அன்று காலை குழந்தைக்கு தாயார் புட்டிப்பால் ஊட்டிவிட்டு உறங்க வைத்துள்ளார்.

இதனையடுத்து, சில மணிநேரங்களின் பின்னர் குழந்தையின் வாயிலும் மூக்கிலும் நுரை காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக குழந்தை அனலைதீவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும், குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தையின் சடலம் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக குழந்தையின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குழந்தையின் உயிரிழப்புக்கான காரணம் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னரே தெரியவரும் என தெரிவிக்கப்படுகிறது.

தையிட்டி போராட்டத்தை நசுக்க

பொய் வழக்குகளைத் தாக்கல் செய்யும் பொலிஸார்

- செல்வராசா கஜேந்திரன் குற்றச்சாட்டு -

தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்களை முடக்கவதற்காக போராட்டங்களில் ஈடுபடுவர்கள் மீது ஸ்ரீலங்கா காவல்துறையினர் பொய் வழக்குகளைத் தாக்கல் செய்து அச்சுறுத்தப் பார்க்கிறார்கள் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொது செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரித்த அவர், “தையிட்டியில் தமிழ் மக்களின் சொந்தக் காணிகளைச் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துப் பிரம்மாண்ட விகாரை அமைக்கப்பட்டமைக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறோம்.

மக்களின் நியாயமான போராட்ட முடக்கத்திற்காகப் காவல்துறையினர் பொய் வழக்குகளைத் தாக்கல் செய்து அச்சுறுத்தப் பார்க்கிறார்கள்.

இன்று (01.10.2026) மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் இது தொடர்பான 5 வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இது வெறும் காணி உரிமைக்கான போராட்டம் மட்டுமல்ல, வடகிழக்கில் தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான இருப்பையும் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாப்பதற்கான போராட்டம்.

அரசினதும் காவல்துறையினருக்கும் அடக்குமுறைகளுக்கு அஞ்சாது, எமது உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் ஒன்றாக அணிதிரள்வோம்” என அவர் தெரிவித்துள்ளார்.

பலாலியில் வேகமெடுக்கும் இராணுவ வைத்தியசாலை கட்டுமானம்

- மக்கள் அதிருப்தி -

யாழ்ப்பாணம் வலி.வடக்கில் உள்ள தனியார் காணியில் இராணுவத்தின் தேவைக்காக கட்டப்பட்டு இடை நடுவில் நிறுத்தப்பட்ட இராணுவ வைத்தியசாலையின் கட்டுமானங்கள் தற்போது மிக வேகமாக இடம்பெற்று வருகிறது.

தனியாருக்கு சொந்தமான சுமார் இரண்டு ஏக்கர் காணியில் இராணுவ தேவைக்காக குறித்த வைத்தியசாலை கட்டப்பட்டு வருகிறது.

கடந்த ஆட்சிக் காலங்களில் குறித்த இராணுவ வைத்தியசாலையின் கட்டுமானங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் மக்களின் எதிர்ப்பு காரணமாக சில காலம் கட்டுமானங்கள் நிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக வந்த பின்னர் மக்களின் காணிகள் மக்களுக்கு விடுவிக்கப்படும் என்ற வாக்குறுதியை வழங்கியிருந்தார்.

இவ்வாறான ஒரு நிலையில் குறித்த இராணுவ வைத்திய சாலையின் மேல் தள வேலைகள் முடிவுறுத்தப்பட்டு கூரை அமைக்கும் வேலைகள் வேகமாக இடம்பெற்று வருகிறது

அப்பாகுதி மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு தொடர்ச்சியாக ஒவ்வொரு வாரமும் போராட்டங்கள் மேற்கொண்டு வருகின்ற நிலையில் குறித்த வைத்தியசாலையின் கட்டுமானங்கள் வேகமாக இடம்பெற்று வருகிறது.

யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் குறித்த ராணுவ வைத்தியசாலையின் கட்டுமானங்களை நிறுத்துமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் குறித்த வைத்தியசாலையின் கட்டுமானங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது

அதேவேளை குறித்த கட்டுமான பணிகள் தொடர்பில் கடற்தொழில் அமைச்சரிடம் அண்மையில் ஊடக சந்திப்பொன்றின் போது , கேள்வி எழுப்பிய வேளை , இராணுவத்தினர் வைத்தியசாலையை கட்டினாலும் , அவற்றை அரசாங்கம் விடுவிக்கும் போது , வைத்தியசாலையும் விடுவிக்கப்பட்டு , மக்கள் பாவனைக்கு பயன்படுத்தப்படும் என தெரிவித்து இருந்தார்.

தனியார் காணியில் எவ்வித அனுமதியும் இன்றி கட்டப்படும் வைத்தியசாலை விடுவிக்கப்பட்டாலும் , அதனை எவ்வாறு மக்கள் பாவனைக்கு கையளிக்க முடியும் ? அது அந்த காணி உரிமையாளர்களிடம் தானே சென்றடையும் என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது

யாழில் வாளுடன் சென்று மக்களை மிரட்டிய வன்முறைக்குழு

- NPP ஆதரவாளர்கள் என தகவல் -

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முதலிகோவில் பகுதியில், இளைஞர்கள் இருவர் வாளுடன் சென்று அப்பகுதி மக்களை மிரட்டும் காணொளி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஊரவர்களுடன் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து குறித்த இளைஞர்கள் வாளுடன் சென்று மிரட்டலில் ஈடுபட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட போதிலும், இதுவரை பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதேவேளை, வாளுடன் சென்றதாக கூறப்படும் இளைஞர்களில் ஒருவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குடும்பப் பெண் ஒருவரின் விரலை வாளால் வெட்டி துண்டாக்கிய சம்பவத்துடன் தொடர்புடையவர் எனவும், அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், குறித்த இருவரும் தேசிய மக்கள் சக்தி (NPP) கட்சியின் ஆதரவாளர்கள் எனவும், தேர்தல் காலத்தில் அக்கட்சிக்காக துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வந்தவர்கள் எனவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

மக்களை அச்சுறுத்தும் வகையில் வாளுடன் நடமாடியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை நடத்தி, சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டது சிங்களவர்களுக்கு வெற்றியே

- ரவிகரன் எம்.பி பகிரங்கம் -

1950களில் கல்லோயா குடியேற்றத் திட்டங்கள் தொடக்கம் 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் வரையில் இந்த நாட்டில் தமிழ்மக்கள் பெரும்பான்மையின ஆட்சியாளர்களால் கொல்லப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் தமிழ்மக்கள் கொல்லப்பட்டது பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வெற்றியாகும் போது, இத்தீவிலுள்ள தமிழர்கள் எவ்வாறு தம்மை இலங்கையர்களாக உணர முடியுமெனவும் அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனவே இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களை இலங்கையர்களாக உணரவைக்கும் நல்லிணக்கத்தை இத்தீவிலுள்ள பெரும்பான்மை இன ஆட்சியாளர்கள் இனியேனும் ஏற்படுத்தவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் 09.10.2026 அன்று உரையாற்றும் போது துரைராசா ரவிகரன் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இதுவரை கிட்டாத நீதிக்காக – 43 ஆண்டுகளாகியும் – எங்கள் ஒவ்வொரு சாட்சியும் மெல்ல மெல்ல வயது முதிர்ந்து காலமாகிச் செல்ல, எஞ்சியிருக்கும் சாட்சிகளோடு இன்றும் நீதிக்காக காத்திருக்கிறோம்!

ஒன்று சேர்ந்து எதிர்த்து நின்று போராடி பிரித்தானியரை வெளியேற்றி ஒன்றாகி அடைந்த ஒரு விடுதலை, பின்னாளில் தனித்த ஒரு பெரு இனத்துக்கு மட்டும் தானா?... என்று எம்மில் எல்லோருமே கேட்கின்ற அளவுக்கு இந்தத்தீவில் எங்களின் விடுதலை மீளப் பறித்தெடுக்கப்பட்டது.

நாங்கள் நீண்ட காலமாக – மிக நீண்டகாலமாக நீதிக்காக காத்திருக்கிறோம். காத்திருப்பதும், சொந்த நிலங்களில் இருந்து கலைக்கப்படுவதும்,வன்முறையால் சொத்துகளும் உயிர்களும் அழிக்கப்படுவதும் தான் இத்தீவில் மாறி மாறி வந்த அரசுகள் எங்களுக்கு ஈந்திருப்பவை!

இவையே ஈழத்தமிழர்களாக எங்களின் இறந்த காலமாயும் நிகழ்காலமாயும் மாறிப்போனது! தீவு முழுமைக்குமான உட்கட்டமைப்பு விருத்தியிலும் நிருவாக நடைமுறைகளிலும் குடிமக்கள் பொதுவாழ்விலும் ஒப்பீட்டளவில் கூடிய அக்கறையை எடுக்கின்ற இந்த அரசாங்கம் கூட, மிக நீண்டகாலமாக நீதிக்காக காத்திருக்கும் ஈழத்தமிழினப் பக்கம் இன்னும் திரும்பவில்லை!

கல்லோயா குடியேற்றத் திட்டங்களுக்காக 1950 களில் நாங்கள் கொல்லப்பட்டதில் இருந்து 2009ஆம் ஆண்டில் போரியல் அறங்கள் வீழ, பன்னாட்டு நீதியும் சாக, பாதுகாப்பு வலயம் என்று நம்பிச் சென்ற இடத்திலும் குண்டுகள் போட்டு சாகடிக்கப்பட்ட எங்களுக்கான நீதியை – உங்களிடம் நம்பி ஒப்படைத்து இன்று காணாமல் தேடிக்கொண்டிருக்கும் எங்கள் உறவுகளுக்கான நீதியை – எங்களுக்கு அரணாக நின்றதாலேயே இன்றளவிலும் சிறையில் வாடுகின்ற எங்களில் எஞ்சிய தமிழ் அரசியல் கைதிகளுக்கான நீதியை என – ஓர் இனமாக – இத்தீவில் பிரித்தானியர் வெளியேறிய காலந்தொட்டு நீதிக்காக காத்திருக்கிறோம்!

எங்கள் பிள்ளை மைத்திரேயி இராமகிருஷ்ணன் தன்னை தமிழ் ஈழப்பெண்ணாகக் கூறிவிட்டார் என்றவுடனேயே இத்தீவில் சலசலப்பும் சமூக வலைத்தள எதிர்ப்புகளும் குவிந்துவிட்டன.

நாங்கள் கொல்லப்பட்டதே உங்களுக்கு வெற்றியாகும் போது எவ்வாறு நீங்களும் நாங்களும் ஒன்றாக முடியும்! ஒரு கையால் மறுகையைத் துண்டிப்பதை வெற்றி எனலாமா!

புலம்பெயர்ந்ததால் மைத்திரேயி சொல்லிவிட்டாள். புலம்பெயராத எங்களில் எஞ்சியோரையேனும் இலங்கையராக உணரவைக்கும் நல்லிணக்கத்தை இத்தீவின் பெரும்பான்மை இனியேனும் தனது வாழ்வாகக் கொள்ளுமா” என தெரிவித்தார்.

மயிலத்தமடுவில் தமிழர்களின் மாடுகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய சிங்களவர்கள்

- வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் தமிழ்ப் பண்ணையாளர்கள் -

மட்டக்களப்பு மயிலத்தமடுவில் மேச்சலுக்காகச் சென்ற பசுக்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் திரும்பியுள்ளதாக பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

காயத்துக்குள்ளாகிய பசுக்கள் கடந்த புதன் கிழமை 14.10.2026 அன்று இரவு மேச்சலுக்காக சென்று 15.10.2026 அன்று காயங்களுடன் திரும்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனை மேச்சல் தரைப் பிரச்சனை மிக நீண்டகாலமாக நிரந்தரத் தீர்வின்றி தொடர்கதையாகவே நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இதனால் அப்பகுதியில் காலா காலமாக கால்நடைகளை வளர்த்து வரும் பண்ணையாளர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும், அச்சத்தின் மத்தியிலும் அவர்களது வாழ்வாதாரமாகவுள்ள கால்நடைகளை வளர்த்து வருகின்றனர்.

கடந்த 3 தினங்களுக்கு முன்னர்தான் மனித உரிமை ஆணைக்குழுவினர், சட்டத்தரணிகள், மனித உரிமை ஆர்வலர்கள், அரச உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் அப்பகுதியக்கு நேரடி விஜயம் செய்து நிலமையை நேரில் பார்த்தறிந்திருந்ததோடு, பண்ணையாளர்களிடமும் கேட்டறிந்திருந்தனர்.

இந்நிலையில் 14.10.2026 அன்று இரவு மேச்சலுக்காகச் சென்ற பசுக்கள் மறுநாள் காலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் திரும்பி வந்துள்ளதாக பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே எந்த அதிகாரிகள் என்னதான் செய்தாலும், எவ்வாறுதான் கதைத்தாலும், எமது மேச்சல்தரைப் பகுதியில் அத்துமீறி வெளி மாவட்டங்களிலிருந்து வந்து சட்டவிரோதமான முறையில் நிலப்பகுதியை ஆக்கிரமிப்புச் செய்து பயிற்செய்கையில் ஈடுபட்டுவருபவர்கள் இவ்வாறு துப்பாக்கி கொண்டு எமது வாய்பேச முடியாத பசுக்களை இவ்வாறு தினம் தினம் சுட்டுக் கொண்டே வருகின்றார்கள்.



நாங்கள் வாழ்வதா? எமது கால்நடைவளர்ப்பு வாழ்வாதாரத்தை மேற்கொள்வதா என தெரியாதுள்ளதாக அப்பகுதி கல்நடை வளர்ப்பாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மயிலத்தமடு பிரச்சனையை விரைவில் தீர்த்துவைப்பதாக தற்போதைய அனுர அரச தரப்பினர் வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய போதும், இன்னமும் சிங்களவர்களினால் மயிலத்தமடு ஆக்கிரமிக்கப்படுவதும், தமிழர்களின் மாடுகள் கொல்லப்படுவதும் தொடர்கதையாக நீண்டு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

செம்மணிக்கு நீதி கோரி

சிறுவனின் விநோத உடை பெற்றோரிடம் பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்கில் அமைந்துள்ள சென் பிலிப் நேரிஸ் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா 12.10.2026 அன்று சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது இடம்பெற்ற வினோத உடைப் போட்டியில், செம்மணி புதைகுழி விவகாரத்தை நினைவூட்டும் வகையில் வேடமணிந்து வந்த சிறுவன் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

“காரணமே இல்லாமல், அம்மாவின் மார்பில் பால் அருந்திய நிலையில் என்னைப் பல ஆண்டுகளுக்கு முன்னர் புதைத்துவிட்டார்கள். எனக்கு நீதி கிடைக்குமா?” என்ற வாசகம் எழுதப்பட்ட உடையை அணிந்திருந்த சிறுவன், அதன் மூலம் நீதிக்கான கோரிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

சிறுவனிடம், “நீங்கள் யாராக வந்துள்ளீர்கள்?” என விருந்தினர்கள் கேட்டபோது, “காரணமே இல்லாமல் செம்மணியில் என்னைப் புதைத்தார்கள்” எனப் பதிலளித்துள்ளார்.

தொடர்ந்து, “எங்கிருந்து, ஏன் இப்போது வந்துள்ளீர்கள்?” எனக் கேட்கப்பட்டபோது, “எனது இறப்புக்கும், என்னைப் போன்று புதைக்கப்பட்டவர்களுக்கும் நீதி கேட்டு செம்மணி புதைகுழியிலிருந்து வந்துள்ளேன். எமக்கான நீதியை இந்த அரசாங்கம் வழங்கும் என என்னுடன் புதைக்கப்பட்ட நண்பர்கள் என்னை அனுப்பி வைத்தார்கள்” என மழலை மொழியில் கூறியுள்ளார்.

சிறுவனின் இந்த உருக்கமான பதில் பார்வையாளர்கள் மற்றும் விருந்தினர்களை நெகிழ்ச்சியடைய வைத்துள்ளது.

இந்நிலையில், குறித்த சிறுவனின் பெற்றோர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் 13.10.2026 அன்று காலை 10.30 மணிக்கு மருதங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.


செம்மணி மனித புதைகுழிக்கு நீதி வேண்டும்!!
“அம்மாவிடம் பால் குடித்துக் கொண்டிருக்கும் போது - என்னை புதைத்து விட்டார்கள். எனக்கு நீதி வேண்டும்!!! ”

ஐந்து கொலை வழக்குகள் பிள்ளையானிற்கு விளக்கமறியல்

மட்டக்களப்பில் கடந்த 2008ஆம் ஆண்டு இடம்பெற்ற ஐந்து கொலைச் சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் உள்ளிட்ட மூவரையும் எதிர்வரும் ஒக்டோபர் 27ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட இருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், காத்தான்குடியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினர் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். வவுணதீவு கரையாக்கன்தீவு பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவமும் இதில் உள்ளடங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிள்ளையான் கைது செய்யப்பட்டார். மேலும், காத்தான்குடியைச் சேர்ந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தகவலாளிகளான மொஹமட் சிபான் மற்றும் மொஹமட் சகீத் ஆகியோரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் 2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த சம்பவங்கள் தொடர்பாகப் பிள்ளையான் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக 2026ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், குறித்த வழக்கு 13.10.2026 அன்று திறந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த மொஹமட் சிபான் மற்றும் மொஹமட் சகீத் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். பிள்ளையான் காணொளி ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது பிள்ளையான் உள்ளிட்ட மூவரையும் எதிர்வரும் ஒக்டோபர் 27ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், பிரித்தானியாவில் தலைமறைவாக இருப்பதாகக் கூறப்படும் ‘பொலிஸ் பாய்ஸ்’ என அழைக்கப்படும் மொஹமட் பாய்ஸிக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணையைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

செம்மணி மனித புதைகுழிக்கு சர்வதேச சுயாதீன விசாரணை தேவை

- வலியுறுத்தும் பின்லாந்து எம்.பிகள் -

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணையை பின்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையின் செம்மணி மனிதப் புதைகுழி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் சுயாதீனமாகவும் சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாகவும் முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்ய பின்லாந்து அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் பின்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான இன்கா ஹொப்சு (Inka Hopsu) மற்றும் ஏவா பியோடெ (Eva Biaudet) ஆகியோர் எழுத்துமூலக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமது கேள்வியில், ஓகஸ்ட் மாத நடுப்பகுதி வரை செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து 580 இற்கும் மேற்பட்ட உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் (OHCHR) தகவல்களை மேற்கோள்காட்டி, கண்டெடுக்கப்பட்ட எச்சங்களில் குழந்தைகளின் உடல்களும் உள்ளடங்குவதாகவும், பாடசாலைப் பைகள், பால் போத்தல்கள் உள்ளிட்ட தனிப்பட்ட பொருட்களும் கண்டெடுக்கப்பட்டதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக செம்மணி கருதப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் போரின்போது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டதுடன், பரவலான போர்க்குற்றங்கள், சித்திரவதைகள் மற்றும் பொதுமக்கள் படுகொலைகள் இடம்பெற்றதாக வெளியான அறிக்கைகளையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் மிகவும் மெதுவாக முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ள அவர்கள், மழை மற்றும் வளப் பற்றாக்குறை காரணமாக கடந்த ஆண்டின் இறுதியிலிருந்து ஏழு மாதங்கள் இடைநிறுத்தப்பட்ட அகழ்வுப் பணிகள், ஏப்ரல் மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாகவும், அப்போது சர்வதேச கண்காணிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச தடயவியல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் செப்டம்பர் மாத வரைவு அறிக்கை இலங்கையை வலியுறுத்தியுள்ளதையும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக, காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் மற்றும் வாழ்க்கைத் துணைகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமலேயே வயதான பெற்றோர்களும் உறவினர்களும் உயிரிழந்து வருவது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளனர்.

கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்களை அடையாளம் காண்பதற்கான டி.என்.ஏ. மாதிரிகளைச் சேகரித்து ஆய்வுசெய்ய சுயாதீனமான பொறிமுறைகள் அவசரமாகத் தேவைப்படுவதாக மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தியுள்ளதையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேச நிதியுதவிகள் விலக்கிக் கொள்ளப்பட்டதால் உள்ளூர் ஆவணப்படுத்தல் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) நேர்காணல் செய்த பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உண்மையை அறிந்துகொள்வதுடன் நீதியையும் கோருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாண்டு பெப்ரவரியில் பின்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் நிறுவப்பட்ட அரசியல் ஆலோசனைப் பொறிமுறை, மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட வெளியுறவுக் கொள்கையை முன்னெடுப்பதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்குவதற்கும் முக்கிய வாய்ப்பாக அமைவதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் அடிப்படையில், செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பான சுயாதீன விசாரணைகளை உறுதிப்படுத்த பின்லாந்து அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது, பின்லாந்து–இலங்கை அரசியல் ஆலோசனைகளில் இவ்விடயம் விவாதிக்கப்பட்டதா, இருதரப்பு உறவுகள், ஐரோப்பிய ஒன்றியம் அல்லது ஐக்கிய நாடுகள் சபை ஊடாக சர்வதேச தடயவியல் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவ உதவிகளையோ நிதியுதவிகளையோ வழங்க பின்லாந்து தயாராக உள்ளதா, அவ்வாறாயின் எவ்வாறு வழங்கப்படும் என்பன உள்ளிட்ட முக்கிய கேள்விகளை அவர்கள் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளனர்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் உண்மையைக் கண்டறிதல், காணாமல் ஆக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைப்பதை உறுதிப்படுத்துதல் ஆகிய விடயங்கள் பின்லாந்து நாடாளுமன்றத்தின் எழுத்துமூலக் கேள்வியாக முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் 09 மாதங்களில் 364 சிறுவர்கள் துஸ்பிரயோகம்!

நாட்டில் இந்த ஆண்டின் கடந்த 09 மாதங்களில் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான 364 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இக்காலப்பகுதியில் கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 114 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், சிறுவர் துஷ்பிர யோகம் மற்றும் சிறுவர்கள் தொடர்பான ஏனைய 9,613 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றில் அதிகளவிலான (1,554 முறைப்பாடுகள்) கடந்த செப்டம்பர் மாதத்திலேயே பதிவாகியுள்ளன.

பாலியல் வன்கொடுமை தொடர்பான 169 முறைப்பாடுகள், பாலியல் அத்துமீறல் தொடர்பான 8 முறைப்பாடுகள், சிறுவர் கடத்தல் தொடர்பான 40 முறைப்பாடுகள், போதைப்பொருள் கடத்தலுக்கு சிறுவர்களைப் பயன்படுத்துவது தொடர்பான 37 முறைப்பாடுகள் மற்றும் சிறுவர்களைக் கொடூரமாக நடத்துவது தொடர்பான 1,889 முறைப்பாடுகள் அடங்குகின்றன.

இது தவிர, கடந்த ஒன்பது மாதங்களில் சிறுவயது கர்ப்பம் தொடர்பான 51 முறைப்பாடுகள், சிறுவர் திருமணம் தொடர்பான 9 முறைப்பாடுகள் மற்றும் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான 99 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

அத்துடன் சிறுவர்களுக்கு எதிரான இணையவழி வன்முறைகள் தொடர்பான 196 முறைப்பாடுகளும், குடும்ப வன்முறைகள் தொடர்பான 46 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பஸில் ராஜபக்சவிற்கு சர்வதேச பிடியாணை : உத்தரவிட்ட நீதிமன்றம்

சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் நிதியை தவறாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கோட்டை நீதவான் பசன் அமரசேன 14.10.2026 அன்றுகுற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் பிரிவுக்கு உத்தரவிட்டார்.

சர்வதேச பொலிஸார் மூலம் சிவப்பு அறிவித்தலை பெற தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் நீதவான் இதன்போது உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சமர்ப்பித்த கருத்துக்களை அடுத்தே, நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்திற்கு 2014 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 7.8 மில்லியன் ரூபாய் நிதியை, அப்பணியகத்தின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தாமல், ஊவா மாகாண சபைத் தேர்தலுக்காக 12,000 டி–ஷர்ட்டுகளைப் பெற்றுக்கொடுத்து அரசாங்கத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பாகவே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் பிரிவு நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

பன்னிரு வேங்கைகளின் 39வது ஆண்டு நினைவேந்தல் தீருவிலில்!

தமிழர் தாயகக் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாண பலாலி இராணுவப் படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில், அவர்களை கொழும்பிற்கு கொண்டு செல்வதற்கு சிறிலங்கா – இந்தியப் படைகள் மேற்கொண்டிருந்த கூட்டுச் சதியினை முறியடிக்க “சயனைட்” உட்கொண்டு 05.10.1987 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 12 வேங்கைகளின் 39ம் ஆண்டு நினைவேந்தல் 05.10.2026 அன்று வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தீருவில் நினைவிடத்தில் நடைபெற்றது.

இவ் நினைவேந்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், வல்வெட்டித்துறை நகரசபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

முதற்பெண் மாவீரர் மாலதியின் 39ம் ஆண்டு நினைவேந்தல் கோப்பாயில்

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் முதற்பெண் மாவீரர் மாலதி அவர்களின் 39ம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் கோப்பாயில் அமைந்துள்ள நினைவிடப் பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பெருந்தொகையான பெண்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவில் எழுச்சியுடன் நடைபெற்ற தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்

முதற்பெண் மாவீரர் மாலதி அவர்களின் நினைவாக கடைப்பிடிக்கப்படும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் 10.10.2026 அன்று முல்லைத்தீவு மாவட்டம் சுதந்திரபுரம் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இவ் நிகழ்வில் முதற்பெண் மாவீரர் மாலதி அவர்களின் திருவுருவப் படத்திற்கு விளக்கேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் கலை நிகழ்வுகளும், எழுச்சியுரைகளும் இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்வில் பெருந்தொகையான பெண்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.



கொக்குவில் பிரம்படி படுகொலையின் 39ம் ஆண்டு நினைவுதினம் அனுஸ்டிப்பு

1987ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 மற்றும் 12ம் திகதிகளில் யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்படி பகுதியில் இந்திய இராணுவத்தினரால் கொல்லப்பட்ட 50ற்கும் மேற்பட்ட தமிழர்களின் 39ம் ஆண்டு நினைவேந்தல் நடைபெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.


39 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு
கொக்குவில் பிரம்படி படுகொலை (11,12.10.1987)
இந்திய அமைதிப் படையினர் கொக்குவில் பிரம்படியில் 1987.10.11,12 ஆகிய திகதிகளில் குடிமக்கள் மீது நடாத்திய கொடூரத் தாக்குதல்களில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பிரம்படியைச் சேர்ந்த எண்மரும், நயினாதீவைச் சேர்ந்த இரு பல்கலைக் கழக மாணவர்கள், கா.பொ.த உயர்தர மாணவன் உட்பட நால்வரும் யாழ் கலட்டியைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்குவர்.
அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவம் பிரம்படியில் நடாத்திய முதலாவது படுகொலை என்பது குறிப்பிடத்தக்கது.
நயினாதீவு தெற்கைச் சேர்ந்தவர்கள்
கொக்குவில் பிரம்படி சேர்ந்த 7 வயது மாணவன்
நினைவேந்தல் குழு கொக்குவில் (பிரம்படி)